*Available online at:* http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
*IJMASRI, Vol. 1, issue 1, pp. 145 - 148, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

**RESEARCH ARTICLE**

# நடுகல், சதிக்கல் உணர்த்தும் தமிழர் பண்பாடு

**பேரா. பெ. காளியானந்தம்[1] மற்றும் முனைவர் கா. கணநாதன்[2]**

*[1] பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, சைவபானு சத்திரிய கல்லூரி, அருப்புக்கோட்டை*

*[2] இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழ்ப்பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்.*

*ஆய்வுச் சுருக்கம்*

*காலத்தின் ஒவ்வொரு அடியும் விலை மதிப்பற்றவை. நேற்றைய அடிகள் இன்றைக்குப் பழமைதான். இன்றைய அடிகள் நாளைக்குப் பழமைதான். எனினும், அடுத்து அடுத்து எடுத்து வைக்க வேண்டிய அடிகளை நேற்றைய அடிகளின் பதிவுகளே தீர்மானம் செய்கின்றன. மேலும், இவை தான் நாளைய தலைமுறைக்கும் வழிகாட்டும் பாதையாக அமையும். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் - என்ற வள்ளுவர் கூற்றுப்படி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் மட்டுமல்ல; தமிழர்கள் உலகிற்கே ஒப்பற்ற பண்பாட்டைப் பதிவு செய்தவர்கள். எனவே தமிழர் பண்பாடு தான் உலகப் பண்பாட்டுப் பெட்டகம் என்று கூறுவதில் மிகையில்லை.*

*வாழ்வியல் நெறிகள் நிலையானது அழிக்க முடியாதது என்றெல்லாம் பேசிவரும் இக்காலக்கட்டத்தில் குலதெய்வ வழிபாடு, பெண்தெய்வ வழிபாடு எனப்படும் பண்பாட்டுக் கூறுகள் உண்மைதான் என்பதை விளக்குவனவே நடுகற்களும், சதிகற்களும் ஆகும். காலங்காலமாக பரம்பரை பரம்பரையாக பின்பற்றப்படும் தொன்மை வரலாறு மற்றும் ஆவணப்படுத்திய நடுகல், சதிக்கல் வழி அறியலாகும்.*

## முன்னுரை

*காலத்தின் ஒவ்வொரு அடியும் விலை மதிப்பற்றவை. நேற்றைய அடிகள் இன்றைக்குப் பழமைதான். இன்றைய அடிகள் நாளைக்குப் பழமைதான். எனினும், அடுத்து அடுத்து எடுத்து வைக்க வேண்டிய அடிகளை நேற்றைய அடிகளின் பதிவுகளே தீர்மானம் செய்கின்றன. மேலும், இவை தான் நாளைய தலைமுறைக்கும் வழிகாட்டும் பாதையாக அமையும். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் - என்ற வள்ளுவர் கூற்றுப்படி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் மட்டுமல்ல; தமிழர்கள் உலகிற்கே ஒப்பற்ற பண்பாட்டைப் பதிவு செய்தவர்கள். எனவே தமிழர் பண்பாடு தான் உலகப் பண்பாட்டுப் பெட்டகம் என்று கூறுவதில் மிகையில்லை.*

*வாழ்வியல் நெறிகள் நிலையானது அழிக்க முடியாதது என்றெல்லாம் பேசிவரும் இக்காலக்கட்டத்தில் குலதெய்வ வழிபாடு, பெண்தெய்வ வழிபாடு எனப்படும் பண்பாட்டுக் கூறுகள் உண்மைதான் என்பதை விளக்குவனவே நடுகற்களும், சதிகற்களும் ஆகும். காலங்காலமாக*



*©2023 by* KRISHMA PUBLICATION

பரம்பரை பரம்பரையாக பின்பற்றப்படும் தொன்மை வரலாறு மற்றும் ஆவணப்படுத்திய நடுகல், சதிக்கல் வழி அறியலாகும் தமிழரின் செம்மாந்த பண்பாட்டைப் பதிவு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வு முன்னோடி**

மனிதகுல நாகரீகத்தின் தோற்றத்தை அறியும் நோக்கில் உலகில் குறிப்பாக மேலைநாடுகளில் தொல்லியல் அகழாய்வுகள் கி.பி 16 ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டது. இந்தியாவில் 1861 ஆம் ஆண்டு தொல்லியல் துறை அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் 1961ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1876 ல் தூத்துக்குடியில் உள்ள ஆதிச்ச நல்லூரில் அகழாய்வு நிகழ்த்தப்பட்டது. எனினும் இவை பற்றிய மேலதிகத் தகவல்கள் வெளிவரவில்லை. இதன் பின் 1900,1912 மற்றும் 1915 ஆம் ஆண்டு வரைநிகழ்ந்தாலும் அவை அகழாய்வுகளை விளக்கும் அறிக்கையாகவே காணப்படுகின்றன என்பது உண்மை. ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு 2004 ல் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் இங்கு இரண்டு ஆண்டுகள் அகழாய்வை நிகழ்த்தியது. தொடர்ந்து தமிழகத்தில் பல இடங் களில் கள ஆய்வுகளும் அகழாய்வுகளும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.[1]

**நடுகல்**

நாட்டைக் காக்கவும், ஊரைக்காக்கவும் நடைபெற்ற போரில் வீர மரணம் அடைந்த வீரனின் நினைவாக நடப்படும் நினைவுக்கல் நடுகல் எனப்படும். தொல் தமிழர்கள் தங்கள் வாழ்வில் பல்வேறு வழிபாட்டு முறைகளை நடைமுறையில் பின்பற்றி வந்துள்ளனர். அவற்றுள் நடுகல் வழிபாடு மிக முக்கியமான ஒன்றாகும் .நடுகல் வீரர்களைத் தெய்வமாக மதித்தனர் .அப்படி நடுகல் வீரர்கள் தெய்வமாகப் போற்றப்பட்டு வழிபட்டமையைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. வீரர்கள் நினைவாக நடுகல் அல்லது வீரக்கல் நடும் மரபு உலகில் எப்பொழுது,எங்கு தோன்றியது என உறுதியாகக் கூற முடியாது. எனினும் தமிழ் நாட்டில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தோன்றியிருக்க வேண்டும் என்பதை

**“காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்**

**சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்**

**றிருமூன்று வகையிற் கல்லோடு புணர**

**சொல்லப் பட்டவெழு மூன்று துறைத்தே”**

**(தொல்காப்பியம் நூ. 1006)**

எனும் நூற்பா வழி விளக்குகிறார் தொல்காப்பியர்.

அக்காலத்தில் நாட்டைக் காக்க போருக்குச் சென்று வீர மரணம் அடைந்த வீரனுக்கு உரிய சடங்கு முறை செய்து தெய்வமாக வழிபடும் நிலையை இக்கூற்று வழி காண்கிறோம். அன்று முடியாட்சி காலம். அக்காலத்தில் போர் என வந்தால், கட்டாயம் வீட்டுக்கு ஒரு ஆண்மகன் களம் சென்றே ஆகவேண்டும் என்பது போர் அறம். தந்தை, மகன்,கணவன்,சகோதரன் என (வரிசையாக) ஒவ்வொருவரும் முறைப்படிச் செல்ல வேண்டுமென்று போர் அறமாக இருந்திருக்கிறது. குடும்பம் , மக்கள் என்றெல்லாம் கருதாது. ஆண்மகன் நாட்டையே பெரிதாக மதித்து இருப்பதை இதன் வழி அறிகிறோம்.

மேலும், இறந்த வீரனுக்காக நடுவதற்கு முதலில் சிறந்த கல்லைத் தேர்ந்தெடுக்கின்றனர்.அதன்பின் அக்கல்லை நீரில் குளிர்வித்து மலர்சூட்டி அலங்கரித்து, விழுப்புண்பட்டு இறந்த வீரனின் பெயரையும் புகழையும் அக்கல்லில் பொறித்து உரிய இடத்தில் நட்டு வந்ததை அறிகிறோம். மேலும் பின் அவனை சுற்றம் அனைவரும் கை கூப்பி வணங்கி அவன் புகழ் பாடி அவனைத் தெய்வமாகக் கருதியதையும் தொல்காப்பியம் வழி அறிய முடிகிறது.

**சங்க இலக்கியங்களில் நடுகல்:**

தொல்காப்பியர் கூறுவது போலவே சங்க இலக்கியங்களும் இத்தகு நடுகல் வழிபாட்டு முறைகளைப் பதிவு செய்துள்ளன. குறிப்பாக குறிஞ்சித் திணையில் மலையையும் மலை சார்ந்து வாழும் வாழ்வில் வீரர்கள் ஆநிரை கவர்தல், மீட்டலில் ஈடுபடும் போது வீரமரணம் அடைந்தவர்களுக்கே நடுகல் நட்டு வழிவழியாக வழிபாடு நிகழ்ந்திருக்கிறது.

நடுகல் வழிபாட்டு முறை தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இறந்தவரின் ஆன்மா சாந்தி அடையவும், மேலுலகம் (சொர்க்கம்) சென்று இன்பமாக வாழ வேண்டுமென்னும் நோக்கில் போர் மரபில் வழிபாடுகளும் நம்பிக்கைகளும் தோன்றியிருக்கின்றன என்பது தொல்காப்பிய கால வழிபாட்டு மரபு கோட்பாடுகளாகும்.

***"பண்டைய கிரேக்கர், ஜெர்மானியர், ரோமானியர், எகிப்தியர், சீனர், தமிழர் அனைவரும் வீர சுவர்க்கம் என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டிருந்தனர்."*** [2]

வீரன் இறந்ததும் அவனது ஆவி மேல் உலகத்திற்குச் சென்றுவிடும் என்றும் அவன் புகழ் தான் இவ்வுலகில் நிற்கும் எனவும் மக்கள் நம்பினர்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்"**

***(குறள் 50)***

என்ற வள்ளுவரின் மறு உலகம் பற்றிய கருத்தும் இங்கு சிந்திக்கத்தக்கது. மேலும் போரில் வீரமடைந்த வீரன் மேல் உலகம் சென்று மாசில்லாத மகளிரை மணந்து இன்புற்றிருக்கலாம் என்பதை

**"தண்ணடை பெறுதல் யாவது படினே**

**மாசில் மகளிர் மன்றல் நன்றும்**

**உயர்நிலை உலகத்து நுகர்ப"**

***(புறம் 287.10-12)***

என்ற புறநானுற்றுப் பாடல் வரிகள் உணர்ந்திருக்கின்றன.

பழங்காலத்தில் வீரர்களுக்கு மட்டுமின்றி மன்னர்களுக்கும் நடுகல் எழுப்பியுள்ளதையும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

**"விழுத்தொடை மறவர் வில்லிடை வீழ்ந்தோர்"**
***(அகம் 53)***
**"விழுத்தொடை மறவர் வில்லிடை தொலைந்தோர்"**

***(ஐங்குறுநூறு 352)***

**நடுகல் லாயினன் புரவலாலெனவே**

***(புறம் 221)***

எனும் பாடல்கள் வழி அறிய வேண்டிய ஒன்று .போரில் வீரர்கள் இருந்தால் ,வீழ்ந்தோர், தொலைந்தோர் எனும் சொற்கள் இடம் பெறுகின்றன .ஆனால், மன்னன் இறந்தால் துஞ்சினான் என்று கல்வெட்டுகளும் இலக்கியங்களும் சுட்டுகின்றன.

**"சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்"**

***(புறம் 35, 36, 37)***

**"சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமா வளவன்"**

***(புறம் 58, 60)***

**"பாண்டியன் சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன்"**

***(புறம் 59)***

**"பாண்டியன் கூட காரத்துத் துஞ்சிய மாறன் வழுதி"**

***(புறம் 51)***

எனும் புறநானுற்றுப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

***"ஆதித்த சோழன் தொண்டைமான் ஆற்றூரில் இறந்ததை தொண்டைமான் ஆற்றூரில் துஞ்சினான் என்றும் சுந்தர சோழன் காஞ்சி மாநகரம் பொன் மாளிகையில் இறந்ததை பொன் மாளிகைத் துஞ்சின தேவர் எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன."*** [3]

மன்னர்கள் இறந்தால் கல்லறைகளின் மேல் கோயில்களைக் கட்டிப் பெருந்தெய்வமாக வழிபட்டனர் (சதாசிவப் பண்டாரத்தார்) பிற்காலச்சோழர் சரித்திரம். இவ்வாறு மேற்குறிப்பிட்ட நடுகற்கள் வீரர்களின் வீரத்தைச் சிறப்பிக்கும் பொருட்டு தெய்வமாக வழிபடும் முறைகளில் கூறப்பட்டுள்ளதை அறிகிறோம்.

**சதிக்கல்**

சதிக்கல் என்பது கணவனோடு தீப்பாய்ந்து உயிரை மாய்த்துக் கொண்ட மனைவி மற்றும் கணவன் என இருவருக்கும் நடப்படும் சின்னமாகும்.

வடஇந்திய சமூகத்தில் பொதுவாக இவ்வழக்கம் இருந்துள்ளது. ஆனால் தென்னிந்தியாவில் இம்மரபு அரசர், அமைச்சர், படைத்தலைவர்,குடும்பங்களில் மட்டுமே நிலவி வந்துள்ளது.

இவ்வாறு தீயில் பாய்ந்து இறந்த பெண்கள் தெய்வமாக மதிக்கப்பட்டு வழிபடும் வரலாறு இருந்ததை இலக்கியங்கள் பதிவு செய்கின்றன.

**கணவன் இறந்தவுடன் மனைவி தீப்பாய்ந்து இறந்ததை தொல்காப்பியம்**

**"நல்லோள் கணவனோடு நளிஅழல் புகீ இச்"**

***(தொல்பொருள் 1025)***

எனும் அடிகளில் கூறுகிறது.

பூதப்பாண்டியனின் மனைவி பெருங்கோப் பெண்டு தன் கணவன் இறந்த செய்தி அறிந்து தானும் தீப்பாய்ந்து இறந்ததை

**"உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ பெருங் காட்டுப்**

**பண்ணிய கருங்கோட்டு ஈமம் நமக்கு அரிது ஆகுக தில்ல:**

**எமக்கு எம் பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்பு**

**வள் இதழ் அவிழ்ந்த தாமரை நள்ளிரும் பொய்கையும்"**

**தீயும் ஓரற்றே"**

***(புறம் 247)***

**"கருங்கட் தாக்கலைப் பெரும் பிறிதுற்றென்ன**

**கைம்மை உய்யாக் காமர் மந்தி**

**கல்லாதவன் பறழ் கிளை முதல் சேர்த்தி**

**ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர்ச்செருக்கு"**

***(குறுந்தொகை 69)***

என ஆண்குரங்கு இறந்துபட்ட அதன் பிரிவினைத் தாங்க முடியாத பெண் குரங்கு ஒன்று மரம் ஏறுதல் முதலிய தம் தொழிலைக் கல்லாத வலிய குட்டியைச் சுற்றத்திடம் ஒப்படைத்து விட்டு ஓங்கிய மலைப் பக்கத்தில் தாவி உயிரை மாய்த்துக் கொள்ளும்.

**பொருள்**

கைம்மை நோன்பிருக்கும் பெண்களைப் போன்றவள் அல்ல நான். ஈமப்படுக்கை உங்களுக்கு அரிதாகத் தோன்றலாம். எனது கணவன் இறந்து விட்டான் எனவே எனக்குத் தீயானது தாமரைக் குளத்து நீர்போல் இன்பம் தருவதாகும்.

வேதம், மனு ஆகியவற்றின் நெறிகள் தமிழ்ச் சமுதாயத்தில் வேரூன்றிய காலத்தில் ஆணுக்குப் பெண்ணடிமை என்ற கருத்து நின்று நிலைத்துவிட்டது. அதனால் தான் பெண்களிடம் பத்தினி, ஒழுக்கம், கற்பு முதலிய கருத்துக்கள் திணிக்கப்பட்டன.

**"ஆர ஞருற்ற வீரபத்தினி**

**உரைசால் பத்தினி"**[4]

என்று சிலப்பதிகாரம் கண்ணகியைக் குறிப்பிடுவதை அறியலாம். மேலும் கணவன் இறந்தவுடன் சுமங்கலியாக உடன்கட்டையேறினால் சொர்க்கத்திற்குச் செல்லலாம் என்ற கருத்தையும் பெண்கள் மனதில் நிலைக்கச் செய்தனர். அதனால் தான் அன்று உடன்கட்டை ஏறுவது (சதி) சிறப்பு என்று பெண்களும் நம்பினர்.

**முடிவுரை**

நடுகல், சதிக்கல் இரண்டும் மனிதர் இறந்த பின் நடப்படும் கல்லைக் குறிக்கின்றன. இவ்விரண்டும் முறையே ஆண், பெண்ணுக்குரிய கற்களைக் குறிப்பதாகவும் பெண் ஆணிற்கு அடிமை என்பதையும் காட்டுகின்றது. நடுகல் என்பது வீரன் ஒருவன் நாட்டைக் காக்கும் பொருட்டு வீரமரணம் அடைந்ததைப் போற்றும் நினைவாக அமைக்கப்பட்ட சின்னம் என்றும், சதிக்கல் என்பது கணவன் இறந்தபின் தீயில் புகுந்து இறந்த மனைவியின் கற்பை நிலைநாட்டும் பொருட்டு அமைக்கப்பட்ட சின்னம் என்பதையும் அறிகிறோம். மேலும், கணவன் இறந்த பின் மனைவிக்கு வாழ்க்கை இல்லை என்றும் சமுதாயத்தில் மதிப்பில்லை என்றும், உயிரோடு சுமங்கலிப் பெண் கணவன் சிதையில் இறந்தால் தேவலோகத்தில் வாழ்வாங்கு வாழலாம் என்ற பெண்ணடிமைக் கருத்தியலும் அக்கால சமுதாயத்தில் இருந்ததை அறியமுடிகிறது.

**சான்றெண்விளக்கம்**


1. The Hindu, Wednesday May 26, 2004.The Hindu, Thursday February 17, 2005.
2. நா.வானமாமலை, நடுகற்களும் நம்பிக்கைகளும் - நடுகற்கள் கருத்தரங்கு பல. 53
3. முனைவர் ப.வெங்கட்ராமன் நடுகற்கள் காட்டும் பண்டைத் தமிழர் வாழ்வியல், தமிழ்க் குடியரசுப் பதிப்பகம், சென்னை. 2021. ப.80.
4. A.R.E.No. 429 of 1902.E.J Volume VII 122- 123


*****